දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

මගේ අංකය )
எனது இல ) CF/EXO/07/2020
My No.

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2020.07. 05
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

# සෞඛ්‍ය සහ දේශීය වෛද්‍ය සේවා අමාත්‍යාංශය
# சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு
# Ministry of Health & Indigenous Medical Services

பொது சுற்றுநிருப இலக்கம்: 02 - 44 /2020

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
உரிய திணைக்களத் தலைவர்களும்.

## சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு சேவை வகை – 03 க்கான தரம் II மின் மருத்துவ தொழிநுட்ப வல்லுனர்களின் பொருட்டான மூன்றாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2020 (முதலாவது தடவை)

சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவியின் பொருட்டு தரம் II ற்கு உயர்த்தப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தி பெற வேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையானது **2020.08.29** ஆம் திகதி சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் இடம், நேரம் என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்படும்.

02. **தகைமைகள் :-**

சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சில் மின் மருத்துவ தொழிநுட்பவியலாளர் பதவியில் 2020.08.05 ஆம் திகதிக்கு தரம் II ற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், இதுவரை இப் பரீட்சையில் சித்தியடையாத அலுவலர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் : -**

**விண்ணப்பம் கிடைக்கப்பெறும் கடைசி தினமான 2020.08.05 திகதியுடன் II ம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

03. **விண்ணப்பங்கள் :-**

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை), "சுவசிரிபாய", 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரிக்கு **2020.08.05** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என பிரிவுத்தலைவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முவரியிடப்பட்ட ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9 x 4 அங்குல அளவுடைய கடிதஉறைகள் 02 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 03 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 04 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

04. பரீட்சைக் கட்டணம்

**4.1** முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**4.2** எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

05. பரீட்சையின் பொருட்டு உட்பத்திக் கொள்ளுதல்

**5.1** ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**5.2** பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவிலுள்ள கடவுச் சீட்டு

06. பரீட்சை நடைமுறை

இவ் வினாத்தாள் அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம் எனும் இரண்டு வினாத்தாளைக் கொண்டமைந்ததாகும். ஒவ்வொரு வினாத்தாளும் (10) அமைப்பு கட்டுரை வினாக்களைக் கொண்டமைந்துள்ளதுடன் (10) வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமாகும். நேரம் - 02 மணி. முழுப் புள்ளிகள் -100. சித்தியடைவதன் பொருட்டு குறைந்தது 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**07.** விடயப்பரப்பு

**07.01** அலுவலக நிர்வாகம் மற்றும் தாபனவிதிக்கோவை வினாத்தாள்

அலுவலக நிர்வாகம் - கடமை ரீதியான அறிவு
நிறுவனத்தின் கடமைகள் தொடர்பான மற்றும் அலுவலக நிர்வாகம் தொடர்பான அறிவு

தாபனவிதிக்கோவை - தாபனவிதிக்கோவையின் கீழ் வரும் அத்தியாயங்களின் படி

அத்தியாயம் **XV** - கற்கை பயிற்சி அல்லது கடமையின் நிமித்தம் வெளிநாடு செல்லல்

அத்தியாயம் **XVI** - விடுமுறைப் பிரயாணங்கள்

| | | |
|---|---|---|
| அத்தியாயம் XXIII | - | சிலவகை நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விஷேட சலுகைகள் மற்றும் அவை தொடர்பான நிபந்தனைகள் |
| அத்தியாயம் XXIV | - | சம்பளக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
| அத்தியாயம் XXV | - | தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் XXVII | - | தொடர்பிணைப்பு வழி |
| அத்தியாயம் XXVIII | - | நிர்வாக நடைமுறைகளும் செயல்முறைகளும் |
| அத்தியாயம் XXX | - | அரசாங்கம் பணியாளர்கள் மீது கொண்டுள்ள உரிமைகள் |
| அத்தியாயம் XXXIII | - | சட்ட மதியுரைகளும் சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் XLVII | - | பொது நடத்தைகளும் ஒழுக்காறும் |
| அத்தியாயம் XLVIII | - | ஓழுக்காற்று நடைமுறை விதிகள் |

**07.02** நிதிப்பிரமாண வினாத்தாள்

**நிதிப்பிரமாணத்தின் கீழ்வரும் அத்தியாயங்களின்** படி

| | | |
|---|---|---|
| அத்தியாயம் VI | - | அரசாங்கப் பணம் முதலியவற்றின் கட்டுக்காப்பும் கட்டுநிதிகளும் வங்கிக் கணக்குகளும் |
| அத்தியாயம் XIII | - | வழங்கு பொருட்களும் கட்டுவேலைகளும் சேவைகளும் |

**08.** பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**09.** இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனத்தில் உள்ள சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் சகல அலுவலர்களுக்கும் அறியப்படுத்துவதற்கு ஒழுங்கினை மேற்கொள்ளவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

**கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்று நிருபங்களிடையே ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமாயின் சிங்கள** மொழிமூல சுற்று நிருபமே வலுவுடையதாகும்.

Donald Murage
Deputy Director General (Admin) II
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha
Colombo 10.

டொனல்ட் முரகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளரின் பொருட்டு
சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு

**EXO**

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சில் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப பிரிவு சேவை வகை – 03 க்கான தரம் II மின் மருத்துவ தொழிநுட்ப வல்லுனர்களின் பொருட்டான மூன்றாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2020 (முதலாவது தடவை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்): ..........................................................

..........................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( ஆங்கில கப்பிற்றல் எழுத்தில்):

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துடன் பெயர் : (தமிழில்): ..........................................................

..........................................................................................

(iv) முதல் எழுத்துடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் II ற்கு நியமிக்கப்பட்ட / உயர்வு பெற்ற கடித இல மற்றும் திகதி: ............................

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம்: ..........................................................

(iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(iv) தேசிய அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

02. தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√ ) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.

அலுவலக நிர்வாகமும், தாபன விதிக்கோவையும் ☐ நிதிப்பிரமாணம் ☐

03. (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம்:

(தமிழில்)..........................................................................

(ஆங்கிலத்தில்).....................................................................

(ஆ) உரிய மாவட்டம் : ..........................................................

(இ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் ☐

- மாகாணசபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் அதற்குரிய மாகாணம் : ..........................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9" x 4" அளவு ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 02 இணைக்கப்பட்டு உள்ளதா? ..........................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்): ..........................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): ..................................

04. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..........................................

05. (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..........................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ........................

| முத்திரைக் கூண்டு |
|---|

06. **விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா.................. பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும்* இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி :..............................

..............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

07. **தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் உறுதியுரை**

இந்த விணணப்பம் விண்ணப்பம் பாரமேற்கப்படும் தினத்திற்கு முன்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ணப்பத்தின் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :

.........................................................

பெயர், கையொப்பம்

08. **நிறுவனத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி/செல்வன்* .............................................. என்பவர்.................................

உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார். ஏன்றும் அவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக என்ற படியால் / முதன் முறை அல்ல* என்ற படியால் ரூபா ........... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் /முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:...............................

.......................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

09. **பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட இயக்கத்தலைவரின் உறுதிப்படுத்தல்.**

திரு/திருமதி/செல்வி/செல்வன்* ........................................................................ என்பவர் எனது

நிறுவனத்தில்* ....................................... உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்றும்.விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரியதகைமைகளினை இவர் பூத்திசெய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:...............................

..........................................................

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம்

(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்)

* - பொருத்தமற்றதை வெட்டிவிடவும்